அறிவும் உரிமைச்
தகவல் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 6764/F/2024

திரு.பா.சிவராமன், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
கருவூலக் கணக்கு இயக்குநரகம்,
3வது தளம், பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை-600 035. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.பா.சிவராமன், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திருமதி.எஸ்.மாலதி, நேர்முக உதவியாளர்(நிர்வாகம்), கருவூலக் கணக்கு இயக்குநரகம், 3வது தளம், பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை, சென்னை-600 035 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 19.02.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "2011 ஜனவரி 1 முதல் 2023 டிசம்பர் 31 வரை தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பல தரப்பட்ட வரிகள் மூலம் மாவட்டங்களிடமிருந்து பெறப்பட்ட வரி தொகையினை மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகள் வாரியாக மாவட்டங்களின் பெயர்களை குறிப்பிட்டு தகவல்களை வழங்கவும்" என்ற தகவலை வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், நிதி

அமைச்சம், தலைமைச் செயலகம், சென்னை-600 009 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் கடித எண்.E-6815294/நிதி(வ.ஆ-1)/2024, நாள் 22.02.2024 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை ஆணையரகம், சென்னை-35 அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்கப்படவில்லை என 23.03.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவைப் பெற்ற மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் அரசு துணைச் செயலாளர், நிதித் (வ.ஆ-1)துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் கடித எண்.E-7089535/நிதி(வ.ஆ-1)/2024, நாள் 04.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் பெறப்படாததால் 20.04.2024 தேதியிட்டு பிரிவு **19(3)-இன்** கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.346014/2024/அந2, நாள் 03.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.492443/2024/அந2, நாள் 31.05.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு தகவல்கள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.346014/2024/அந2, நாள் 03.04.2024 மற்றும் ந.க.எண்.492443/2024/அந2, நாள் 31.05.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையம் பதிவு செய்து, ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (01.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6764/F/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கருவூலக் கணக்கு இயக்குநரகம்,
3வது தளம், பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை-600 035.

**<u>மனுதாரர்</u>**

திரு.பா.சிவராமன்,
எண்.53/210, கீரைத் தோட்டம்,
திருச்சி மெயின்ரோடு, தாதகாப்பட்டி,
சேலம் மாவட்டம்-636 006.

Copy to: File NS/PA-